11.03.2019 காலை முரளி ஓம் சாந்தி
பாப்தாதா, மதுபன்

---

இனிமையான குழந்தைகளே! நாம் பரமாத்மா தந்தையின் பல்கலைக்கழக மாணவர்கள் என்ற மறைமுகமான குஷி உங்களுக்கு இருக்க வேண்டும், எதிர்கால புதிய உலகத்தின் ஆஸ்தியை அடைவதற்காக படித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

கேள்வி:

எந்தவொரு நினைவில் எப்போதும் இருந்தால் தெய்வீக குணம் தாரணை ஆகிக் கொண்டே இருக்கும்?

பதில்:

ஆத்மாக்களாகிய நாம் சிவபாபாவின் குழந்தைகள், பாபா நம்மை முள்ளிலிருந்து மலர்களாக மாற்ற வந்துள்ளார் - இந்தவொரு நினைவு எப்போதும் இருந்தால் தெய்வீக குணம் தாரணை ஆகிக் கொண்டே இருக்கும். படிப்பு மற்றும் யோகத்தின் மீது முழுமையான கவனம் இருக்க வேண்டும், விகாரங்களின் மீது வெறுப்பு இருந்தால் தெய்வீக குணம் வந்து கொண்டே இருக்கும். எந்த சமயத்திலாவது ஏதாவது விகாரம் போரிட்டால் நான் முள்ளாக இருக்கின்றேன், நான் மலராக ஆக வேண்டும் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

ஓம் சாந்தி.

நாம் ஆன்மீக பல்கலைக்கழகத்தில் அமர்ந்திருக்கிறோம் என்பது குழந்தைகளுடைய புத்தியில் இருக்கிறது. இந்த போதை இருக்க வேண்டும். சாதாரணமாக பள்ளியில் அமர்ந்திருப்பது போல் இங்கே முட்டாள்களாக அமர்ந்திருக்கக் கூடாது. நிறைய குழந்தைகள் எதுவும் அறிவில்லாதவர்களாக அமர்ந்திருக்கிறார்கள். இது உயர்ந்ததிலும் உயர்ந்த பரமபிதா பரமாத்மாவின் பல்கலைக்கழகம் என்பது நினைவிருக்க வேண்டும். நாம் அவருடைய மாணவர்கள். எனவே உங்களிடத்தில் எவ்வளவு பெருமிதம் இருக்க வேண்டும். இது மறைமுகமான குஷி மற்றும் மறைமுகமான ஞானமாகும். ஒவ்வொரு விஷயமும் மறைமுகமானதாகும். நிறைய பேருக்கு இங்கே அமர்ந்திருந்தாலும் தீய எண்ணங்கள் வந்து கொண்டிருக்கிறது. இங்கே நீங்கள் எதிர்கால புதிய உலகத்தின் ஆஸ்தியை அடைவதற்காக படிக்கின்றீர்கள். எனவே உங்களுக்கு எவ்வளவு குஷி இருக்க வேண்டும். தெய்வீக குணங்களும் இருக்க வேண்டும். இங்கே அனைவரும் பிராமணர்கள் தான் வருகிறார்கள். அங்கே (கலியுகத்தில்) இருக்கும் குப்பையிலிருந்து நீங்கள் விடுபட்டு நீங்கள் இங்கே வருகின்றீர்கள். எனவே குழந்தைகளாகிய நீங்கள் எவ்வளவு குஷியில் இருக்க வேண்டும். இந்த சமயத்தில் முழு உலகமும் குப்பையில் கிடக்கிறது.

சத்யுகத்தின் மலர் தோட்டம் எங்கே, கலியுகத்தின் குப்பை எங்கே. கலியுகத்தில் ஒருவர் மற்றவரை முள் போன்று குத்திக் கொண்டே இருக்கிறார்கள். நீங்கள் இப்போது மலராக ஆக வேண்டும். எனவே எவ்வளவு குஷி இருக்க வேண்டும். இப்போது நாம் மலர்களாக ஆகின்றோம். இது தோட்டமாகும். பாபாவை தோட்டக்காரன் என்று சொல்லப்படுகிறது. தோட்டக்காரன் வந்து முட்களை மலர்களாக மாற்றுகின்றார். நாம் எந்தவிதமான மலர்களாக மாறிக் கொண்டிருக்கிறோம் என்ற அறிவு குழந்தைகளுக்கு இருக்க வேண்டும். இங்கே தோட்டமும் இருக்கிறது. முரளியை கேட்டு விட்டு பிறகு தோட்டத்திற்குச் சென்று, நாம் எப்படிப்பட்ட மலர் என்று மலர்களோடு தங்களை ஒப்பிட வேண்டும். நான் முள் இல்லையே? எந்த நேரத்தில் கோபம் வருகிறதோ அப்போது நான் முள்ளாக இருக்கின்றேன், என்னிடத்தில் பூதம் இருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். அந்தளவிற்கு வெறுப்பு வர வேண்டும். கோபம் அனைவருக்கும் மத்தியில் வந்து விடுகிறது. காமம் அனைவருக்கும் இடையில் வர முடியாது. அதை மறைத்து செய்கிறார்கள். கோபம் வெளியில் வந்து விடுகிறது. கோபப்படுகிறார்கள் என்றால் அதனுடைய தாக்கம் கொஞ்ச நாட்களுக்கு இருக்கிறது. கோபத்தின் போதையும் இருக்கிறது, பேராசையின் போதையும் இருக்கிறது. தங்கள் மீது தங்களுக்கே வெறுப்பு வர

வேண்டும். பாபா நம்மை மலர்களாக மாற்றுகின்றார் என்று நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். காமம் மற்றும் கோபம் மிகவும் கெட்டதாகும். மனிதர்களுடைய அழகு முழுவதையும் இழந்துவிடுகிறார்கள். இங்கே அழகை காட்டினால் தான் அங்கேயும் அழகை அடைவீர்கள். தெய்வீக குணங்களை தாரணை செய்யுங்கள் என்று பாபா தினமும் குழந்தைகளுக்குப் புரிய வைத்துக்கொண்டிருக்கின்றார். சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டும் அல்லவா. இந்த லஷ்மி - நாராயணன் எவ்வளவு குணவான்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு முன்னால் சென்று தான் மகிமையும் பாடுகிறார்கள் - நாங்கள் கீழானவர்கள், பாவிகள், காமுகர்கள். தாங்கள் சர்வகுணங்களும் நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள் என்று. சொர்க்கம் மலர்களின் தோட்டம் மற்றும் நரகம் முட்களின் காடு என்று நீங்கள் புரிய வைக்கவும் செய்கிறீர்கள். சிவபாபா சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கின்றார், இராவணன் நரகமாக மாற்றுகின்றான். ஆத்மாக்களாகிய நாம் பாபாவின் குழந்தைகள், நம்மிடத்தில் குப்பைகள் எங்கிருந்து வந்தது? என்று சிந்தனை செய்ய வேண்டும். ஒருவேளை குப்பைகள் இருந்தால் பாபாவினுடைய பெயரை கெடுத்து விடுவோம். கோபப்பட்டால் பாபாவிற்கு நிந்தனை செய்விப்போம். கோபம் எனும் பூதம் வந்தது மற்றும் பாபாவை மறந்துவிட்டோம். பாபாவின் நினைவு இருந்தது என்றால் எந்தவொரு

பூதமும் வரவே வராது. ஒருவேளை யாரையாவது துக்கம் அடையச் செய்தால் அதனுடைய தாக்கமும் ஏற்பட்டுவிடுகிறது. ஒருமுறை கோபப்பட்டால் 6 மாதம் வரை இவன் கோபக்காரன் என்று அனைவருடைய புத்தியிலும் இருக்கிறது. பிறகு மனதிலிருந்து தூரமாகி விடுகிறார்கள். பாப்தாதாவின் மனதிலிருந்தும் இறங்கி விடுகிறார்கள். இந்த தாதாவும் கூட உலகத்திற்கு எஜமானராக ஆகின்றார், இவரிடத்திலும் கூட கண்டிப்பாக திறமைகள் இருக்கும். ஆனால் யாருடைய அதிர்ஷ்டத்திலும் இல்லை எனும்போது முயற்சியும் செய்வதில்லை. எவ்வளவு சகஜமான முயற்சியாக இருக்கிறது, பாபாவை மட்டும் நினைவு செய்தீர்கள் என்றால் ஆத்மா தூய்மையாக ஆகி விடும். வேறு எந்த வழியும் இல்லை. இந்த சமயத்தில் யாரும் ராஜரிஷி இல்லை, இராஜயோகத்தை கற்றுக் கொடுக்கக் கூடியவர் ஒரு பாபாவே ஆவார். மனிதன், மனிதனை மாற்ற முடியாது. பாபா வந்து அனைவரையும் மாற்றுகின்றார். யார் முற்றிலும் நல்ல விதத்தில் மாறி விடுகிறார்களோ, அவர்கள் சத்யுகத்தில் முதன்-முதலில் வருகிறார்கள். எனவே எல்லாவித தீய பழக்கத்தையும் விட்டு விட வேண்டும். படிப்பின் மீது யோகத்தின் மீது முழு கவனம் வைக்க வேண்டும். அனைவரும் ஒரே மாதிரி உயர்ந்த நிலையை அடைய முடியாது என்பதையும் தெரிந்துள்ளீர்கள். ஆனால் பாபா முயற்சி செய்ய வைப்பார். எந்தளவிற்கு முடியுமோ

முயற்சி செய்து உயர்ந்த பதவியை அடையுங்கள். இல்லையென்றால் கல்ப-கல்பத்திற்கும் அடைய முடியாது. பாபாவை நினைவு செய்தீர்கள் என்றால் குப்பைகள் நீங்கி விடும் என்று பாபா அடிக்கடி புரிய வைத்துக் கொண்டே இருக்கின்றார். அந்த சன்னியாசிகள் ஹடயோகத்தை கற்றுக் கொடுக்கிறார்கள். ஹடயோகத்தின் மூலம் நல்ல ஆரோக்கியம் ஏற்படுகிறது, அவர்கள் ஒருபோதும் நோயுறுவதில்லை என்று புரிந்து கொள்ளா தீர்கள். இல்லை, அவர்களும் நோயுறுகிறார்கள். பாரதத்தில் லஷ்மி- நாராயணனுடைய இராஜ்யம் இருந்தபோது அனைவருடைய ஆயுளும் அதிகமாக இருந்தது, ஆரோக்கியமும்-செல்வமும் இருந்தது. இப்போது அனைவரும் முற்றிலும் குறைந்த ஆயுளை உடையவர்களாக இருக்கிறார்கள். பாரதத்தை இப்படி மாற்றியது யார்? இதை யாரும் தெரிந்திருக்கவில்லை. முற்றிலும் காரிருளில் இருக்கிறார்கள். நீங்கள் எவ்வளவு தான் புரிய வைத்தாலும் அவர்களுக்கு புரிய வைப்பது மிகவும் கடினமாகும். இருந்தாலும் ஏழைகள், சாதாரண மானவர்கள் தான் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்கிறார்கள். இங்கே யாராவது லட்சாதிபதிகள் இருக்கிறார் களா என்ன? இன்றைக்கு லட்சம் கூட பெரிய விஷயம் கிடையாது. இன்றைக்கு நிறைய லட்சாதிபதிகள் இருக்கிறார்கள். அவர்களையும் கூட பாபா சாதாரணமானவர்கள் என்று தான்

சொல்கிறார். இன்றைக்கு கோடீஸ்வரர்களின் விஷயமாகும். திருமணங்களுக்கு கூட எவ்வளவு செலவு செய்கிறார்கள். யாருக்கும் ஞான அம்பு தைக்கும் அளவிற்கு குழந்தைகளாகிய நீங்கள் மிகவும் யுக்தியோடு புரிய வைக்க வேண்டும். பெரிய-பெரிய மனிதர்கள் யாராவது நாடாளுமன்ற உறுப்பினர் வருகிறார் என்றால் குஷி அடைகிறார்கள். ஆனால் ஒருவரிடம் கூட அனைவருக்கும் சொல்லும் அளவிற்கு சக்தி இல்லை. நீங்கள் புரிய வைக்கின்றீர்கள் ஆனால் யதார்த்தமாக முழுமையாக புரிந்து கொண்டு செல்வதில்லை. உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான், உயர்ந்ததிலும் உயர்ந்தது இந்த ஆஸ்தி. லஷ்மி-நாராயணனுக்கு யார் இந்த சொர்க்கத்தின் ஆஸ்தியை கொடுத்தது? இவர்கள் எங்கே இருக்கக் கூடியவர்கள்? இது நிறைய பேருக்கு தெரிவதே இல்லை. அருங்காட்சியத்திற்கு நிறைய பேர் புரிந்து கொள்வதற்கு வருகிறார்கள். சேவைக்கான வாய்ப்பு நன்றாக இருக்கிறது ஆனால் யோகம் (தந்தை நினைவு) இல்லை. பாபாவை நினைவு செய்தால் மகிழ்ச்சியும் வரும். நாம் யாருடைய குழந்தைகள். எவ்வளவு குழந்தைகள் விதிப்படி படிப்பதில்லை. பாபாவிடம் யோகம் ஈடுபடுத்துவதில்லை. யாரும் சம்பூரணமாக ஆக வில்லை. வரிசைகிரமமாக இருக்கிறார்கள். குழந்தைகள் தனிமையில் அமர்ந்து பாபாவை நினைவு செய்ய வேண்டும். அப்படிப்பட்ட தந்தையிடமிருந்து

நாம் சொர்க்கத்தின் ஆஸ்தியை அடைகின்றோம். இந்த உலகத்தில் நாம் தான் அனைவரையும் விட தூய்மை யற்றவர்களாக ஆகியுள்ளோம், பிறகு நாம் தான் தூய்மையானவர்களாக ஆக வேண்டும். இதை நல்ல விதத்தில் நினைவு செய்ய வேண்டும். பாபா இப்படி இப்படியெல்லாம் செய்யுங்கள் என்று பலவிதமான வழியைச் சொல்கின்றார். எப்படி ராணி விக்டோரியாவின் மந்திரி ஏழையாக இருந்தார், தெரு விளக்கு வெளிச்சத்தில் படித்து-படித்து உயர்ந்த பதவியை அடைந்து விட்டார். ஆர்வம் இருந்தது. இந்த ஞானம் கூட ஏழைகளுக்காகும். பாபா ஏழைப்பங்காளன் ஆவார். செல்வந்தர்கள் பகவானை என்ன நினைவு செய்ய முடியும். எங்களுக்கு சொர்க்கம் இங்கே தான் என்று சொல்வார்கள். அட, பாபா இன்னும் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யவில்லை. இப்போது தான் செய்து கொண்டிருக்கின்றார். பாபாவை நினைவு செய்யுங்கள், கண்டிப்பாக தூய்மையாக வேண்டும். பாரதத்தின் பழமையான இராஜயோகத்தை பரமபிதா பரமாத்மாவைத் தவிர வேறு யாரும் கற்றுக் கொடுக்க முடியாது என்பதை யாருக்கும் எப்படி புரிய வைப்பது என்று குழந்தைகள் யுக்திகளை உருவாக்க வேண்டும். ஹடயோகம் விடுதலை (துறவற) மார்க்கத்தை சேர்ந்தவர்களுக்காக ஆகும். யாருக்கும் நன்மை நடக்க வேண்டும் என்றால் பிறகு அப்படி எழுதவும் செய்வார்கள் என்று பாபா புரிய வைத்துக்

கொண்டிருக்கின்றார். இப்போது நேரம் குறைவாக இருக்கிறது எனவே யாருடைய புத்தியிலும் வருவதில்லை.

உங்களுடைய இது ஈஸ்வரிய மிஷன் (நிறுவனம்) ஆகும். நீங்கள் மனிதர்களை தேவதைகளாக மாற்றும் சேவை செய்ய வேண்டும். உலகத்தில் அனேக விதமான வழிகள் வந்து கொண்டிருக்கின்றன, எனும்போது அவர்களுடையது எவ்வளவு விளம்பரமாகிறது. எவ்வளவு கண்மூடித்தனம் இருக்கிறது. இரவு-பகலுக்குண்டான வித்தியாசம் இருக்கிறது. பிராமணர்களாகிய உங்களிடத்திலும் கூட இரவு-பகலுக் குண்டான வித்தியாசம் இருக்கிறது. சிலர் எதையும் தெரிந்திருக்கவில்லை. மிகவும் சகஜமானதாகும், தங்களை ஆத்மா என்று புரிந்துக் கொள்ளுங்கள், பாபாவை நினைவு செய்தீர்கள் என்றால் பாவம் அழிந்து விடும். தெய்வீக குணத்தை தாரணை செய்தீர்கள் என்றால் அவ்வாறே ஆகி விடுவீர்கள். தண்டோரா போட்டுக் கொண்டே இருங்கள். தேக-அபிமானம் இல்லையென்றால் டோலக்கை (மத்தளம்) கழுத்தில் போட்டுக் கொண்டு பாபா வந்திருக்கிறார் என்று அனைவருக்கும் சொல்லிக் கொண்டே இருங்கள். அவர் கூறுகின்றார் என்னை நினைவு செய்தீர்கள் என்றால் நீங்கள் தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாக ஆகி விடுவீர்கள். ஒவ்வொரு வீட்டிற்கும்

இந்த செய்தியை சொல்ல வேண்டும். அனைவர் மீதும் துரு ஏறியிருக்கிறது. தமோபிரதானமான உலகமாக இருக்கிறது, அனைவருக்கும் பாபாவின் செய்தியைக் கண்டிப்பாக கொண்டு சேர்க்க வேண்டும். கடைசியில் உங்களை ஆஹா ஆஹா என்று சொல்வார்கள். இவர்கள் அதிசயத்தை செய்துள்ளார்கள் என்று சொல்வார்கள். அவ்வளவு விழிக்கச் செய்தார்கள் நாம் விழித்துக் கொள்ளவில்லை. யார் விழித்துக் கொண்டார்களோ அவர்கள் அடைந்தார்கள், யார் உறங்கினார்களோ அவர்கள் இழந்து விட்டார்கள். பாபா இராஜ்யத்தை அளிக்க வந்திருக்கின்றார் திரும்பவும் இழந்து விடுகிறார்கள். சேவைக்கான யுக்திகளை உருவாக்க வேண்டும். பாபா வந்திருக்கின்றார், என்னை மட்டும் நினைவு செய்தீர்கள் என்றால் விகர்மங்கள் வினாசம் ஆகும், தூய்மையாகி தூய்மையான உலகத்திற்கு எஜமானர்களாக ஆவீர்கள் என்று பாபா கூறுகின்றார். நினைவு செய்யவில்லை என்றால் பாவம் அழியாது. எந்தவொரு துருவும் இருக்கக் கூடாது அப்போது தான் உயர்ந்த பதவியை அடைய முடியும். இல்லையென்றால் பதவியும் குறையும், தண்டனையும் அனுபவிப்பீர்கள். சேவைக்கு இன்னமும் நேரம் இருக்கிறது. சித்திரங்களை தங்களோடு கொண்டு செல்வதின் மூலம் சேவை செய்ய முடியும். சித்திரம் கெட்டுவிடாத அளவிற்கு நன்றாக உருவாக்க வேண்டும். இந்த சித்திரங்கள் நல்ல பொருளாகும்.

மற்றபடி மாடல்கள் பொம்மைகளாகும். பெரிய-பெரிய மனிதர்களுக்கு பெரிய-பெரிய நினைவு சித்திரங்கள் இருக்கின்றன.ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வரை கூட இருக்கின்றன. உங்களுடைய இந்த 6 படங்கள் போதுமானதாகும். இந்த சிருஷ்டி சக்கரம் எப்படி சுற்றுகிறது என்று சொல்லுங்கள் - நாங்கள் தங்களுக்கு புரிய வைக்கின்றோம். இந்த சக்கரத்தை நினைவு செய்வதின் மூலம் நீங்கள் சக்கரவர்த்தி ராஜாவாக ஆவீர்கள். மிகவும் நல்ல மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் இதனுடைய மதிப்பு குழந்தைகளிடத்தில் இல்லை. இதைப்பற்றி புரிய வைத்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் உங்களுடைய வருமானம் சேர்ந்து கொண்டே இருக்கும். இந்த பேட்ஜ் கழுத்தில் தொங்கிக் கொண்டே இருக்கலாம். இந்த பாபா இந்த பிரம்மாவின் மூலம் இந்த ஆஸ்தியை கொடுக்கின்றார். ரயிலில் கூட சுற்றி சுற்றி இதை புரிய வைத்துக் கொண்டே இருங்கள். சிறிய குழந்தை கூட செய்யலாம். உங்களை யாரும் தடுக்க முடியாது. வைர-வைடூரியங்கள், பழம்-மலர்கள், மாளிகைகள் அனைத்தும் இதில் அடங்கியிருக்கும்படியான பேட்ஜ் இதுவாகும். ஆனால் குழந்தைகளுடைய புத்தியில் இது வருவதில்லை. சித்திரம் கையில் இருக்க வேண்டும் என்று பாபா நிறைய முறை புரிய வைத்திருக்கிறார். உங்களை யாராவது தலைகீழாகவும் தவறாகப் பேசுவார்கள். கிருஷ்ணருக்கும் கூட திட்டு கிடைத்தது

அல்லவா - விரட்டினார், இதை செய்தார்.... ஆனால் அவர்களையும் கூட பட்டத்து ராணியாக மாற்றினார் அல்லவா. உலகத்திற்கு எஜமானராக ஆகி விட்டு பிறகு அப்படிப்பட்ட காரியம் செய்வாரா என்ன. இந்த ஞானத்தில் மிகுந்த போதை இருக்க வேண்டும். சீக்கிரம் வினாசம் ஆக வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இப்போது பாபா நம்மோடு இருக்கின்றார் என்று சொல்கிறோம். பாபாவை விட்டு விட்டால் பிறகு 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகு தான் கிடைப்பார். அப்படிப்பட்ட பாபாவை நாம் எப்படி விடுவது. பாபாவிடம் நாம் படித்துக் கொண்டே இருக்க வேண்டும். இது பிராமணர்களுடைய உயர்ந்ததிலும் உயர்ந்த பிறவியாகும். நமக்கு இராஜ்யத்தை கொடுத்துக் கொண்டிருக்கும் பாபா அப்படிப்பட்டவரை பிறகு நாம் அவரை சந்திக்க முடியாது. ஆனால் கங்கையில் இருக்கக் கூடியவர்களுக்கு அந்தளவிற்கு மதிப்பு இருப்பதில்லை. வெளியில் இருப்பவர்கள் எவ்வளவு மகத்துவம் அளிக்கிறார்கள். இங்கேயும் கூட வெளியில் இருப்பவர்கள் பலியாகிறார்கள். ஒருவேளை யோகம் இல்லையென்றால் புரிய வைப்பதின் தாக்கம் யார் மீதும் ஏற்படுவதில்லை, எதையும் புரிந்து கொள்வதில்லை. நிறைய பேர் வருகிறார்கள், இப்படி-இப்படி யெல்லாம் புரிய வைத்தார்கள் என்று எழுதுகிறார்கள், மிகவும் நன்றாக இருந்தது என்று சொல்கிறார்கள். கேட்காதது போல் கேட்டிருக்கிறார்கள்

என்று பாபா புரிந்து கொள்கிறார். கொஞ்சம் கூட புரிந்து கொள்ளவில்லை. பாபாவையே தெரிந்து கொள்ளவில்லை. ஒருவேளை ஏதாவது புரிந்து கொண்டார் என்றால் அப்படிபட்ட பாபாவிடம் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும், கடிதம் எழுத வேண்டும். நீங்கள் அப்படிப்பட்ட பாபாவிற்கு எப்படி கடிதம் எழுதுவது என்று உடனே கேட்க வேண்டும். சிவபாபா கேர் ஆ்ஃப் பிரம்மா. உடனே எழுத ஆரம்பித்து விட வேண்டும். இவர் ரதம் அல்லவா. ஆனால் அதிக மதிப்பு இவருக்குள் பிரவேசம் ஆகுபவருடையதாகும்.

சேவை செய்து-செய்து நிறைய குழந்தைகளுக்கு தொண்டை கட்டிக் கொள்கிறது. ஆனால் யோகம் இல்லையென்றால் அம்பு தைப்பதில்லை. இதையும் நாடகம் என்று தான் சொல்ல முடியும். பாபாவை தெரிந்து கொண்டால் பிறகு பாபாவை சந்திக்காமல் இருக்க முடியாது. ரயிலிலும் கூட நாம் பாபாவிடம் செல்கிறோம் என்று யோகம் (அவர் நினைவில்) நிறைந்தவர்களாகத் தான் வருவார்கள். வெளி நாடுகளிலிருந்து வருகிறார்கள் என்றால் மனைவி, குழந்தைகள் அனைவரும் நினைவுக்கு வருகிறார்கள் அல்லவா. இங்கே நாம் யாரிடம் செல்கிறோம்! எனவே வழியில் எவ்வளவு குஷி இருக்க வேண்டும். சேவை செய்து கொண்டே வர வேண்டும். பாபா கடலாக இருக்கின்றார், குழந்தைகள் பின்பற்றுகிறார்களா என்று

பார்க்கின்றார். ஞானத்தின் அலை எழுகிறது என்றால் குஷி அடைக்கின்றார். இவர் மிகவும் நல்ல சொல்படி நடக்கும் குழந்தையாக இருக்கின்றார். அதிகாலை நினைவு யாத்திரையில் நிறைய நன்மை இருக்கிறது. அதிகாலையில் மட்டும் தான் நினைவு செய்ய வேண்டும் என்பது கிடையாது. எழும்போது- அமரும்போது, சாப்பிடும்போது- குடிக்கும்போது நினைவு செய்ய வேண்டும், சேவை செய்தீர்கள் என்றால் நீங்கள் நினைவு யாத்திரையில் இருங்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) யாருடைய மனதையும் துக்கமடையச் செய்யக் கூடாது. உள்ளுக்குள் ஏதாவது பூதம் இருந்தது என்றால் சோதனை செய்து அதை நீக்க வேண்டும், மலராக ஆகி அனைவருக்கும் சுகம் கொடுக்க வேண்டும்.

2) நாம் ஞானக்கடலின் குழந்தைகள் எனும்போது உள்ளுக்குள் ஞானத்தின் அலை எழுந்துக் கொண்டே

இருக்க வேண்டும். சேவைக்கான யுக்திகளை உருவாக்க வேண்டும், ரயிலில் கூட சேவை செய்ய வேண்டும். கூட-கூடவே தூய்மையாவதற்காக நினைவு யாத்திரையிலும் இருக்க வேண்டும்

வரதானம்:

யோக பலத்தின் மூலம் மாயாவின் சக்தி மீது வெற்றியடையக் கூடிய சதா வெற்றியாளர் ஆகுக.

ஞானத்தின் சக்தி மற்றும் யோகத்தின் சக்தி தான் அனைத்தையும் விட சிரேஷ்டமான சக்தியாக இருக்கிறது. எப்படி விஞ்ஞானத்தின் சக்தியானது இருள் மீது வெற்றியடையச் செய்து வெளிச்சத்தைக் கொண்டு வருகிறது. அப்படி யோகத்தின் சக்தி சதா காலத்திற்காக மாயா மீது வெற்றியடையச் செய்து வெற்றியாளர் ஆக்குகிறது. மாயாவின் சக்தியானது யோகத்தின் சக்திக்கு முன்னால் ஒன்றுமே இல்லை என்ற அளவிற்கு சிரேஷ்டமானது. யோக சக்தியுடைய ஆத்மாக்கள் கனவில் கூட மாயாவிடம் தோல்வியடையமாட்டார்கள். கனவில் கூட எந்தவித பலவீனமும் வரமுடியாது. அப்படிப்பட்ட வெற்றியின் திலகம் உங்கள் நெற்றியில் இடப்பட்டிருக்கிறது.

சுலோகன்:

முதலில் எண்ணில் வரவேண்டுமென்றால் வீணானதை சக்திசாலியாக மாற்றி விடுங்கள்.